# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.73 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 3 | நாள் | : | 21.06.2025 |
| பெயர் | : | சதீஷ்குமார் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 21[st] day of June 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தூத்துக்குடி எட்டாயுபுரம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 1, 2 எதிரிகளைத் தெரியும். நான் கரிவலம்வந்தநல்லூர் பயாட் நிறுவனத்தில் 2013 ம் ஆண்டு பயிற்சி பெற்றேன். நான் பயிற்சி நிறுவனத்தில் இருந்தபோது அ.சா.2 யைத் தெரியும். நான் வீட்டிலிருந்து நிறுவனத்திற்கு சென்று பயிற்சி பெற்று வந்தேன். ரூ.25,000/- பணம் செலுத்தியிருந்தேன். இசக்கிதுரை என்பவரையும் தெரியும். 1,2 எதிரிகள் அந்நிறுவன இயக்குநர்களாக இருந்தார்கள் 3 ம் எதிரி அங்கு அடிக்கடி வருவார். நாங்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது ஒருநாள் மலையடிப்பட்டி தென்னந் தோப்பிற்கு எங்களை இராஜராம் அழைத்துச்

சென்றார். நாங்கள் அங்கு செல்லும் முன்பே வேறு சிலர் இருந்தார்கள். எங்களையும் அவர்களோடு அமரச் சொன்னார்கள். அங்கு வைத்து நீங்கள் எல்லோரும் ஏழை வர்க்கத்தினர் நீங்கள் உழைத்து முன்னேற வேண்டுமென்றால் ஆயுதம் ஏந்தி போராட வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் உங்களுக்கு அனைத்து பயிற்சியும் தருகிறோம் என்று சொன்னார்கள். இதைப்போலவே பல மையங்கள் பல இடங்களில் உள்ளது. அங்கும் ஆயுத பயிற்சி அளித்துதான் இயக்கத்தில் சேர்த்துள்ளோம். நீங்களும் இயக்கத்தில் சேர்ந்தால் தேவையானதை செய்வோம் என்றும் நமது இயக்கம் நக்சலைட் இயக்கம் என்று சொன்னார்கள். அங்கு வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தவர் சொன்னார். முள்ளை முள்ளால் எடுப்பது போல் ஆயுதம் ஏந்தி போராட வேண்டும் அப்போது தான் அரசு கவனத்தை ஈர்க்க முடியும் என்று கூறி துண்டு பிரசுரங்கள் கொடுத்தார்கள். பின்னர் எங்களை பயிற்சி நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அதன்பின்னர் எங்கள் இயக்கத்தில் சேருங்கள் என்று இராஜராம் அழைத்தார். நான் விருப்பமில்லை என்று கூறிவிட்டு பயிற்சி நிலையத்திற்கு செல்வதை நிறுத்திவிட்டேன். அதன்பின்னர் நாளிதழிலும், உள்ளூர் சேனல்களிலும் வேலை வாங்கி தருவதாக சொல்லி ஏமாற்றிவிட்டதாக வழக்கு போடப்பட்டுள்ளது என்று தெரிந்து கொண்டேன். அதன்பின்னர் ஒரு மாதம் கழித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். சுமார் 2 மாதம் கழித்து DSP யும் விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

முன்னதாக என்னை போலீசார் விசாரித்தபோதும் இதே விவரத்தைதான் கூறினேன். எந்த தேதியில் எத்தனை மணிக்கு சென்றோம் என்று ஆய்வாளரிடம் கூறினேன். தேதியைச் சொல்லவில்லை. நான் 9 ஆண்டுகளாக காவல் துறையில் பணிபுரிகிறேன். நான் தற்போது சட்ட ஒழுங்கு காவல்நிலையத்தில் பணிபுரிகிறேன். எனவே நீதிமன்றங்களில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு என்ன முறையில் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வேண்டுமென்று ஏற்கனவே பயிற்சி உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் ஊரிலிருந்து 7 கி.மீ. கரிவலம்வந்தநல்லூர் உள்ளது. சங்கரன்கோவிலிருந்து 11 கி.மீ. தொலைவில் உள்ளது. பயாட் நிறுவனத்திற்கும் காவல் நிலையத்திற்குமிடையே 1 1/2 கி.மீ. தூரம் இருக்கும். நான் தினந்தோறும் பயிற்சிக்கு செல்லவில்லை புத்தக பொருட்கள் வாங்குவதற்காக செல்வேன். எனவே எனக்கு அந்நிறுவனத்தில் யார் யார் பொறுப்பாளர்கள் என்று தெரியாது என்றால் சரியல்ல. 3 ம் எதிரி அந்த நிறுவனத்தில் எந்த தேதியில் எந்த பணியில் சேர்ந்தார் என்று எனக்கு தெரியாது நான் பயிற்சிக்கு செல்லும்போது அங்கு இருந்தார். தினசரி வருகைப்பதிவேடில் நான் கையொப்பமிடுவதில்லை. நான் நிறுவனத்தில் பயிற்சிக்கு சேர்ந்ததாக கூறுவதும் என்னை மலையடிப்பட்டி மலையடிவாரம் அழைத்துச் சென்றதாக கூறுவதும் என்னை நக்சல் இயக்கத்தில் சேரும்படி கூறியதாகவும் நான் மறுத்துவிட்டதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. அங்கு பயிற்சியிலிருந்த நபர்கள் யார் யார் என்று

எனக்கு தெரியாது அவர்கள் எனக்கு அறிமுகமானவர்கள் அல்ல. என்னை 3ம் எதிரி பயிற்சிக்கு அழைத்த விவரத்தை நான் வேறு யாரிடமும் கூறவில்லை. நான் என்னை நக்சல் பாரி இயக்கத்தில் அழைத்ததால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. நான் பட்டய படிப்பு முடித்துள்ளேன். என்னிடம் துண்டு பிரசுரங்கள் கொடுத்தார்கள் என்று விசாரணையில் கூறினேன் அந்த பொருட்களை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. நான் சொன்னபடி பயாட் நிறுவனத்தில் பயிற்சிக்கு சென்றதாக கூறியதும் மலையடிவாரம் சென்றதாக கூறுவதும் அங்கு நக்சலைட்டில் சேரச்சொல்லி கூறியதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிரி என்னை அழைத்ததாக கூறுவது பற்றி காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை. ஆயுதப்பயிற்சியில் சேரும்படி அழைத்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. காவல் உயர் அதிகாரிகள் எங்கள் உயர் அதிகாரிகளுடன் கூறிய முறைப்படி நான் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.06.21 17:45:56 +0530

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No. 73 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 2 | நாள் | : | 21.06.2025 |
| பெயர் | : | ராமவேல் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 21st day of June 2025.

எதிரிகள் ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை ரயில்வே காவல் பிரிவில் சைபர் செல்லில் வேலை பார்த்து வருகிறேன். நான் பி.எஸ்.சி கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்துள்ளேன். எனது ஊர் தென்மலை. 1 முதல் 3 எதிரிகளை தெரியும். நான் காவலர் பயிற்சி எடுத்து வந்தேன். இந்நிலையில் ஊரில் உள்ள பலரும் கரிவலம்வந்தநல்லூர் பயாட் நிறுவனத்தில் பயிற்சி பெற்றுவருவதால் நானும் சென்றேன். சுமார் 3 அல்லது 4 மாதம் காவலர் எழுத்துதேர்வு மற்றும் உடல்தகுதித்தேர்வுக்கு பயிற்சி பெற்றேன். சுமார் ரூ.25,000/- பணம் கட்டினேன்ன. என்னுடன் இசக்கிதுரை என்பவரும், அழகுநாட்சியாபுரத்தை சேர்ந்த சதீஷ்குமாரும் பயிற்சி பெற்றார்கள். சுமாராக 250 பேர்கள் பயிற்சி

பெற்றிருப்போம். கங்காதரனும் அவரது மனைவியும் அடிக்கடி நிறுவனத்திற்கு வந்து நடத்தினார்கள். எங்களை 3ம் எதிரி ஒருநாள் பாறைப்பட்டி அருகேயுள்ள மலையடிவாரத்திற்கு அழைத்து சென்றார். அங்கு மேலும் சில பேர் இருந்தார்கள். எங்களை அவர்களுடன் இருக்கும்படி 3ம் எதிரி சொன்னார். நாம் அனைவரும் ஏழை வர்க்கத்தினர் . நாம் கூறுவது அரசிற்கு கேட்காது. நாம் ஆயுதப்புரட்சி செய்யும்போது தான் அரசின் கவனத்தை ஈர்க்கமுடியும். கூடங்குளத்தில் நாம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்து விட்டது. நாம் மேலும் தொடர்ந்து ஆயுதப்புரட்சி செய்து இயக்கத்தை வளர்க்கவேண்டும் என்று சொன்னார். நமது இயக்கம் ஆந்திரா, சட்டீஸ்கர் மாநிலத்தில் நல்ல முறையில் வளர்ந்துள்ளது என்று சொன்னால் அவர் கூறிய நமது இயக்கம் என்ற இயக்கம் மாவோயிஸ்ட் இயக்கம் ஆகும். நக்சல் பாரி எழுச்சி முள்ளை முள்ளால் எடுப்பது, ஆயுதப்புரட்சி செய்து அரசின் கவனத்தை ஈர்ப்போம் என்றும், கூறி இயக்கத்தில்சேர்வதாக இருந்தால் அனைத்து பயிற்சியும் அளிப்போம் என்று சொன்னார். பின்னர் எங்களை அங்கிருந்து புறப்படும்படி சொன்னார். அதன்பின்னர் 3ம் எதிரி தன்னிடம் எங்களிடம் உறுப்பினராக சேருகிறீர்களா என்று கேட்டார் நான் அதற்கு பயந்து போய் அந்த பயிற்சி நிறுவனத்திற்கு செல்லாமல் நின்று விட்டேன். அதன்பின்னர் தொலைக்காட்சியில் வெளிநாட்டிற்கு அனுப்புவதாக கூறி ஏமாற்றிவிட்டதாக புகார் கொடுக்கப்பட்டது தெரிந்து கொண்டேன். அதன்பின்னர் ஆய்வாளர் என்னை அழைத்து விசாரித்தார். நான் நடந்த விபரங்களை கூறினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்கள் ஊரில் இருந்து கரிவலம்வந்தநல்லூர் 7 கி.மீ தொலைவில் உள்ளது. பயாட் நிறுவனம் கரிவலம்வந்தநல்லூர் ஊருக்கு வெளியே உள்ளது. அந்த நிறுவனத்தின் மிக அருகிலேயே 50 மீட்டருக்கு உள்ளாகவே காவல் நிலையம்உள்ளது என்றால் சரிதான். தற்போது உள்ளது. முன்பு காவல் நிலையம்அப்போது இல்லை. தற்போதைய காவல்நிலையம் கோவிலுக்கு முன்புறமும், பழைய காவல்நிலையம் கோவிலுக்கு பின்புறமும் இருந்தது என்றால் சரிதான். பயாட் நிறுவன விளையாட்டு மைதானமும், காவல் நிலையமும் 50 மீட்டர் தொலைவில் உள்ளது. நான் காவல்பணியில் சேர்ந்து 10 ஆண்டுகள் ஆகிறது. 10 ஆண்டுகளாக பலமுறை நீதிமன்றத்திற்கு சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் நடைமுறை தெரியும் என்றால் சரிதான். நான் 2014ம் ஆண்டுஇளைஞர்காவல்படையில் சேர்ந்தேன். பயாட் நிறுவன பயிற்சிக்கு பின் சென்றேன் என்றால் சரிதான். அந்நிறுவன பயிற்சியால் தான் காவல்பணிக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. நான் 2013 மார்ச் மாதம் பயிற்சிக்கு சேர்ந்தேன். தேதி ஞாபகமில்லை. 3ம்எதிரி அந்த நிறுவனத்தில் என்ன பொறுப்பில் இருந்தார் , எப்போது பணிக்கு சேர்ந்தார் என்பது எனக்கு தெரியாது. பயாட் நிறுவனம் முறையான அனுமதி பெற்று இயங்கும் நிறுவனம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்நிறுவன பயிற்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் வருகைப்பதிவேடு உண்டு என்றால் சரிதான். காலை 6.00 மணி முதல் 8.00 மணி

வரை உடற்பயிற்சி நடக்கும். 9.30 மணிக்கு வகுப்புகள் ஆரம்பமாகும். 1.00 மணிக்கு முடிவடைந்துவிடும். மாலை 6.00 மணிவரை நடக்கும். எந்ததேதியில் மலையடிவாரத்திற்கு சென்றோம் என்பது குறிப்பிட்டு சொல்லமுடியாது. மலையடிவாரத்திலிருந்து நேரடியாக பயிற்சி நிலையத்திற்கு வந்தோம். நான் பயிற்சி நிலையத்தில் தான்தங்கியிருந்தேன். எங்கள் ஊரிலிருந்து பயிற்சி நிறுவனத்திற்கும் 20 நிமிடத்தில் வருவோம். நான் மலையடிவாரத்திற்கு சென்றபோது அங்கிருந்த நபர்கள் யார் யாரென்று தெரியாது. அவர்கள் அறிமுகம் அற்றவர்கள். சம்பவம் பற்றி நான் யாரிடமும் கூறியதில்லை. காவல்நிலையத்தில் புகாரும் கொடுக்கவில்லை. தொலைக்காட்சியில் செய்தி வந்த பின் என்னை போலீசார் விசாரித்தார்கள். போலீசார் தான் முதலில் என்னை தானாக தொடர்பு கொண்டு விசாரித்தார்கள் . அதற்கு முன்பு நான் என் விவரங்களை போலீசாருக்கு தெரிவிக்கவில்லை. என்னை 2013 ஜூலை மாதம் விசாரித்தார்கள். அதையடுத்து 2, 3 மாதங்களுக்குள் டிஎஸ்பி விசாரித்தார். காலை 10.00 மணிக்கு பயிற்சி நிறுவனத்திலிருந்து பாறைப்பட்டி மலையடிவாரத்திற்கு புறப்பட்டு சென்றோம். மதியம் 1 மணிக்குள் வந்துவிட்டோம். எத்தனை மணிக்கு புறப்பட்டு சென்றோம், திரும்பி வந்தோம் என்று என்விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். நான்சொன்ன நாளில், பயிற்சிக்கு சேர்ந்ததாக கூறுவதும், அங்கு பயிற்சி பெற்றதாக கூறுவதும், 1,2 எதிரிகளை நான் பார்த்ததாக கூறுவதும், 3ம் எதிரி என்னை மலையடிவாரத்திற்கு அழைத்து சென்றதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல.

ஆயுதப்பயிற்சியில் சேரும்படி அழைத்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. காவல் உயர் அதிகாரிகள் எங்கள் உயர் அதிகாரிகளுடன் கூறிய முறைப்படி நான் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.06.21 17:46:07 +0530

## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No. 73 /2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 1 | நாள் | : 21.06.2025 |
| பெயர் | : முருகேசன் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 21st day of June 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் கீழத்திருவேங்கடத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு 2 மகன்கள் உள்ளன. எனது மனைவியின் பெயர் வள்ளிபிரியா. நான் கங்காதரனை பார்த்ததில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 2012 ம் ஆண்டு ஒரு நாள் போலீசார் எங்கள் ஊருக்கு வந்தார்கள். நான் மாடியில் படுத்திருந்தேன். நள்ளிரவு 11.45 முதல் 12.00 மணி வரை இருக்கலாம். திருவேங்கடம் பஜாரில் என்னை நிற்க வைத்து காவலர்கள் அனைவரும் கையெழுத்து போடு என்று சொன்னார்கள். நான் கையெழுத்து போடமாட்டேன் என்று சொன்னேன். கங்காதரன் மீது புகார் கொடுக்கவேண்டும் என்றும், நான் அவருக்கு பணம் கொடுத்துள்ளேன் என்றும், எனவே கையெழுத்து போடு என்று சொன்னார். நான்

கையெழுத்து போட்டேன். நான் கையெழுத்து போட்ட தாள் இதுதான். அதிலுள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகும். அதன் பின்னர் என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

அரசு தரப்பில் கு.வி.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. கரிவலம்வந்தநல்லூரில் பயாட் தொழிற்பயிற்சி என்ற நிறுவனம் உள்ளதா என்பது எனக்கு தெரியாது. அவர்கள் வேலைக்கு வெளிநாட்டிற்கு அனுப்புவதாக பல ஊர்களிலும் நோட்டீஸ்கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் என் மனைவி நகைகளை அடகு வைத்து மீட்டுள்ளேன். என் அண்ணணிடம் கடன் வாங்கியுள்ளேன். விவசாயத்திற்கு வாங்கினேன். 05.12.2021ம் தேதி காலை 10.00 மணிக்கு கரிவலம்வந்தநல்லூரில் உள்ள பயாட் கம்பெனியில் பணம் கெட்டி ரசீது பெற்றுள்ளேனா என்றால் சரியல்ல. ஞானபாண்டியனை தெரியும். நான் கரிவலம்வந்தநல்லூர் சென்று பயாட் நிறுவனத்தை ஒரு போதும்அணுகவில்லை. என்னை யாரும் மிரட்டவில்லை. நான்வெளிநாட்டிற்கு செல்ல பயாட் நிறுவனத்தில் 05.11.2012ம் தேதி காலை 10..00 மணிக்கு ரூ75,000/ பணம்கட்டி ரசீது பெற்றேன் என்றும், என்னுடன் பலரும் பணம்கட்டினார்கள் என்றும், நான் என்னை ஏன் வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை என்று 1ம் எதிரியின் அலுவலகம்

சென்றுகேட்டபோது அங்கிருந்த 2, 3 எதிரிகளும்என்னை பார்த்து தேவடிய மகனே, சிறிக்கி மகனே மெல்லத்தான் வெளிநாட்டிற்கு அனுப்புவோம் என்றும், பணம்கேட்டு வந்தால் வெட்டிக்கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள் என்றும், நான் பணம் கிடைத்துவிடும் என்று காத்திருந்து கிடைக்காததால் 01.07.2013 ம் தேதி அன்றிரவு இரவு 10.00 மணிக்கு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் முன்னதாக துபாயில் வேலை செய்தேன். 1ம் எதிரி எங்களுக்கு மிகவும்வேண்டியவர் என்றும், அவரை காப்பாற்ற பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரண இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.06.21 17:46:14 +0530